தினதந்தி 21/06/2019

# அண்ணா பல்கலைக்கழக கல்லூரிகளில் கல்வி கட்டணம் உயருகிறது

## சிண்டிகேட் கூட்டத்தில் ஒப்புதல்

சென்னை, ஜூன்.21–

அண்ணா பல்கலைக்கழக கல்லூரிகளில் கல்வி கட்டணம் உயருகிறது. நடப்பாண்டில் இந்த கட்டண உயர்வு அமலுக்கு வருவதாகவும் தகவல் வெளியாகி இருக்கிறது.

### கட்டணத்தை உயர்த்த முடிவு

அண்ணா பல்கலைக்கழகத்தின் சிண்டிகேட் கூட்டம் துணைவேந்தர் சூரப்பா தலைமையில் கடந்த ஜனவரி மாதம் நடந்தது. அதில் அண்ணா பல்கலைக்கழக என்ஜினீயரிங் கல்லூரிகளில் இன்னென்ன தேவைகளுக்காக கல்வி கட்டணத்தை உயர்த்த வேண்டும் என்று முடிவு செய்து, அரசுக்கு கோரிக்கை அனுப்பியது. ஆனால் அந்த கோரிக்கையை அரசு நிராகரித்தது.

அதனைத் தொடர்ந்து மே மாதம் நடந்த சிண்டிகேட் கூட்டத்திலும் இதுதொடர்பாக பேசப்பட்டு, உயர்கல்வி துறை செயலாளர் மங்கத்ராம் ஷர்மாவிடம் கோரிக்கை வைக்கப்பட்டது. ஆனால் அவர், 'அரசு தான் இதற்கு முடிவு எடுக்க வேண்டும்' என்று தெரிவித்துவிட்டார். ஆனால் பல்கலைக்கழக துணைவேந்தர் சூரப்பா விடாமல், மீண்டும் 2 முறை அரசுக்கு கடிதம் எழுதி இருந்தார்.

### சிண்டிகேட் கூட்டத்தில் ஒப்புதல்

அதை ஏற்ற அரசு, 'நீங்கள் உயர்த்தி இருக்கும் கட்டணத்தை ஏற்க முடியாது, அதில் சிறிது குறைக்க வேண்டும்' என்று தெரிவித்தது. அதன்படி, இளங்கலை படிப்புகளுக்கு பல்கலைக்கழகம் உயர்த்திருந்த கட்டணத்தில் 30 சதவீதம் குறைத்தும், முதுகலை படிப்புகளுக்கு அவர்கள் நிர்ணயித்து இருந்த கட்டணத்தில் 20 முதல் 25 சதவீதம் குறைத்தும் பல்கலைக்கழகத்துக்கு அறிக்கை அனுப்பி இருப்பதாக உயர்கல்வி துறை அமைச்சரும், செயலாளரும் நேற்று தெரிவித்து இருந்தனர்.

இந்த நிலையில் நேற்று அண்ணா பல்கலைக்கழகத்தின் சிண்டிகேட் கூட்டம் நடந்தது. கூட்டத்தில் அரசின் முடிவை, சிண்டிகேட் ஏற்று ஒப்புதல் அளித்து இருக்கிறது. எவ்வளவு கட்டணம் உயருகிறது? என்பது குறித்த அதிகாரப்பூர்வ அறிவிப்பை பல்கலைக்கழகம் விரைவில் வெளியிடும். நடப்பாண்டிலேயே இந்த கட்டணம் நடைமுறைக்கு வர இருப்பதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளது. 20 ஆண்டுகளுக்கு பிறகு கல்வி கட்டணம் உயருகிறது என்பது குறிப்பிடத்தக்கது.